1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முதலி லேயே குறிப்பிட்டேன். எந்தெந்த முக்கியமான துறைகளில் எல்லாம் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று. அது மட்டுமல்லாமல் மத்திய அரசின் தேசிய தகவல் தொகுப்பு மையம் அதாவது நேஷனல் இன்ஃபர்மேட்டிக் சென்டர் என் பதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் தமிழக அரசின் செயலாக்கத்திற்காக என். டீ. 550 என்ற சூப்பர் மினி கணிப் பொறியும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக சூப்பர் ஏ. டி. என்ற கணிப்பொறியும் நிறுவப்பட்டுள்ளது. அதை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். மத்திய அரசினு டைய செலவிலே அந்த மையத்தை வைத்திருக்கிறார்கள். அதில் 70 விழுக்காடு கணிப்பொறி நேரத்தை மாநில அரசின் துறைகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் 30 விழுக்காடு கணிப்பொறி நேரத்தை மத்திய அரசின் துறைகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் முறைகள் இருக்கின்றன. ஆக எந்தெந்தத் துறைகள் கணிப்பொறியின் மூலமாக விரைவாகப் பணிகளை ஆற்றி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருக்கின்றனவோ அந்தந்தத் துறைகள் இந்த மையத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம். அதைத் தவிர ஒவ்வொரு துறையைப் பொறுத்த வரையிலும், முக்கிய மான திட்டங்களை நிறைவேற்றுகிற துறைகளுக்கெல்லாம் கணிப் பொறிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82 திரு. க. அர்ச்சுனன் மாண்புமிகு நிதியமைச்சர்.

82—

சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவித்தல்.

*4020—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சிறு சேமிப்பு திட்டத்தில் சேமிப்போருக்கு பல்வேறு வரிச் சலுகைகள் அளித்து குறைந்த வட்டி விகிதத்தில் திருப்பி கொடுக் கப்படுவதை மாற்றி வரிச் சலுகைகளை தவிர்த்து அதிக வட்டி திரும்ப கொடுக்கிற முறையை பின்பற்றி, சிறு சேமிப்பு திட்டத்தை ஊக்குவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறு சேமிப்பு திட்டங்களை வடிவமைக் கவோ, திட்டங்களை இயற்றவோ அல்லது இயற்றிய திட்டங்களை மாற்றவோ, மைய அரசிற்குத்தான் அதிகாரம் உண்டு. மாநில அரசிற்கு இது சம்பந்தமாக எந்த அதிகாரமும் இல்லை.

முற்பகல் 9-35.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை ஊக்குவிக்கிற வகையில் அதிகப் படியான பரிசுகளையும், பரிசுத் தொகைகளையும் சிறு சேமிப்புத் திட்டத்திலே பணம் போடுகிறவர்களுக்கு வழங்குகிற வகையில் மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே பொது மக்களை பல்வேறு வகைகளிலே கவரத் தக்க வகையிலே, பல்வேறு பரிசுப் பொருள்கள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர, ஊக்கத் தொகையும் முதலீடு செய்வோருக்கு, அதாவது ஆயிரம் ரூபாய்க்கு மேலே முதலீடு செய்வோருக்கு 1 சதவிகிதம் ஊக்கத் தொகை தரப்படுகிறது. அந்தத் தொகையைத் திரட்டித் தரும் முகவர்களுக்கு மாநில அரசு ஒரு சதவிகிதத்தையும், மத்திய அரசு ஒரு சதவிகிதத்தையும் தருகின்றன. இது தவிர 500 ரூபாய்க்கு ஒரு கூப்பன் என்றும், 2,000 ரூபாய்க்கு ஒரு கூப்பன் என்றும்இருமுறைகள்வைத்துபரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர முக்கியமான 3 திட்டங்களில்— தேசிய சேமிப்புத் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, 15 ஆண்டுகள் பொதுச் சேமிப்புக் கணக்கு ஆகிய 3 திட்டங்களில் முதலீடு செய்கிறவர்களுக்கு வருமான வரிச் சலுகைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. இந்திர விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் மற்றும் மாதாந்திர வருமான அஞ்சலக சேமிப்புத் திட்டம் போன்றவைகளில் சிம்பிள் இன்ட்ரஸ்ட் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் கிடைக்கத் தக்க அளவுக்கு வாய்ப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன. 11 விதமான வகைகளிலே சேமிப்பு செய்யலாம். அவரவர்களுடைய நிலைமை, தன்மை, சேமிப்புத் தொகை, அவற்றை மீண்டும் எடுக்கும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து ஏதேனும் ஒரு திட்டத்தை அவர்கள் மேற்கொள்ளலாம்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெபாசிட் செய்கிறவர்களுக்குத் தரப்படும் 1 சத விகிதம் கமிஷன் ஏறத்தாழ தரப்படுவதில்லை. சிறு சேமிப்பை வசூலிப்பவர்கள் ஏறத்தாழ அரசாங்க அதிகாரிகளாக இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், டிபாசிட் செய்கிறவர்களுக்கு முழுமையாக அந்தத் தொகை போய்ச் சேருகிற வகையில், ஒருவர் ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்கிறபோது, 1 சதவிகிதம் கமிஷ னைக் கழித்துக் கொண்டு 990 ரூபாய் கட்டினால் போதுமென்று சொல்ல வேண்டும். அதிகாரிகள் டெபாசிட் செய்கிறவர்களிடம் ஆயிரம் ரூபாயை வசூலிக்கும் விஷயம் அரசுக்குத் தெரியுமா? இதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர்கள் இது பற்றிய விவரங்களை எல்லாம் முதலீடு செய்கிறவர்களுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆக முதலீடு செய்கிறவர்கள் ஊக்கத் தொகை பெறுகிறார்கள். முகவர்கள்தான் பெரும்பாலும் இப்படிப்பட்ட பத்திரங்களை எல்லாம் வாங்கிக் கொடுக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17,000, 18,000 முகவர்கள் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக இருக்கிறார்கள். ஆக அந்த ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு சட்ட திட்டங்களிலே, விதி முறைகளிலே இடமிருக்கிறது. பெரும்பாலோர் பெற்று வருகிறார்கள். எங்கேயாவது பெறாமல் இருந்தால் உரிய சீட்டுகள், மற்றவைகளைஉரிய அதிகாரிகளிடம் கொடுத்தால் அவர்களும் பெறுவதற்கு வழி இருக்கிறது. இதில் யாரையும் யாரும் ஏமாற்ற இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, சிறுசேமிப்பை ஊக்குவிக்க அவர்களுடைய ஊதியத்திலிருந்து ஒரு சிறிய தொகையை பிடித்தம் செய்ய அரசு ஒரு திட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் கட்டாயப்படுத்தி, போட்டே தீர வேண்டுமென்று சொல்ல முடியாது. இதில் இருக்கும் சலுகைகள், வசதிகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றை எல்லாம் எடுத்துக் கூறுவதன் மூலமாக, அவரவர்கள் தன்னிச்சையாக ஏதேனும் ஒரு வகையில் சிறு சேமிப்பு செய்ய வேண்டுமென்ற வகையில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய எண்ணங்களை கவரும் வகையில் கவர்ச்சிகரமான பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83. டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) இந்தக் கேள்வியை நீங்கள் போடுகிறீர்களா ?

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கேள்வி. எனவே நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 46 (3)-ன்படி ஒரு உறுப்பினர் இருக்கையில் இல்லை என்றாலும், இன்னொரு உறுப்பினர் அந்தக் கேள்வியை எழுப்ப அனுமதி கேட்டால், அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தக் கேள்விக்கு அனுமதி வழங்கலாம். திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

83—

இளம் வழக்கறிஞர்களுக்கு அரசுத் துறை வேலை.

*3540 டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் உள்ள இளம் வழக்கறிஞர்களை அரசு பல்வேறு துறைகளில் வேலையில் அமர்த்தும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டம் அரசிடம் உள்ளது?

முற்பகல் 9-40.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இளம் வழக்கறிஞர்களை அரசு பல்வேறு துறைகளில் வேலைகளில் அமர்த்தும் திட்டம் இருக்கிறது. ஐந்து வகைகளில் இது தற்போது போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அரசினாலே நிறைவேற்றப்படுகின்றது. அந்த ஐந்து வகைகள் வருமாறு :

(1) தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இளம் வழக்கறிஞர்களை மாவட்ட முன்சீப்— கம்— சப்மாஜிஸ்டிரேட் நடுவர்களாகவும், சார்பு நிலை நீதிபதிகளாகவும் (சப் கோர்ட்டுகளில்) மற்றும் மாவட்ட நீதிபதிகளாகவும் (District Judges) பணியமர்த்துகிறது.

(2) அரசு, உள்துறையின் Home Courts Department மூலமாக இளம் வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர்களாக நியமிக்கிறது. (ஏ.பி,பி. காவல் துறையிலும் சட்ட ஆலோசகர் மற்றும் குற்றவியல் வழக்கறிஞர் ஆகிய பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள்.